திருச்சி விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தர்ணா போராட்டம்

கல்யாணசுந்தரம்

First Published : 24 Aug 2012 12:58:36 PM IST

திருச்சி, ஆக., 24 : திருச்சியில் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் தலைமையில் இன்று காலை துவங்கியது. கூட்டத்தில் மாவட்ட விவாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

கூட்டம் துவங்கியதும், பல்வேறு விவசாய சங்க தலைவர்களும், நிரவாகிகளும், கர்நாடகத்தில் இருந்து தமிழகத்தக்கு உரிய நீரை பெற்றுத் தர மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், காவிரி நீர் பிரச்சனையில் கவனம் செலுத்தி, பிரதமர் தலையிட்டு தண்ணீர் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றம் நதி நீர் பங்கீட்டு ஆணையத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்த வேண்டும் என்று கர்நாடகத்தை வலியுறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி கூட்ட அரங்கில் இருந்து முன்பகுதிக்கு வந்த விவசாயிகள் தர்ணா போராட்டம் செய்தனர்.

மேற்கூறிய கோரிக்கை அடங்கிய மனுவை ஆட்சியரிடம் அளித்து அதனை தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கவும் கோரிக்கை விடுத்தனர். இதனால் சிறிது நேரம் கூட்ட அரங்கில் பரபரப்பு ஏற்பட்டது. பிறகு வழக்கம் போல விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது.

---

இயற்கை வளங்களை பாதுகாக்கும் வகையில் புதிய குவாரிக்கு அனுமதி கூடாது விவசாயிகள் வலியுறுத்தல்

பதிவு செய்த நேரம்:2012-08-25 10:51:03

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் இயற்கை வளங்களை பாதுகாக்கும் வகையில் புதிய குவாரிகள்

அமைக்க அனுமதி வழங்குவதை கைவிட வேண்டும் என விவசாயிகள் கோரி க்கை விடுத்துள்ளனர்.

திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் கலெ க்டர் ஜெயஸ்ரீ தலைமையில் நேற்று நடந்தது. இதில் விவசாயிகள் பேசியது:

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் அயிலை சிவ.சூரியன்: மதுரை உயர்நீதி மன்றம் வழங்கியுள்ள தீர்ப்புகளுக்கு புறம்பாக திருச்சி மாவட்டம் அன்பில்நத்தம் பகுதியிலும், அந்தநல்லூர் ஒன்றியம் சிறுகமணி பகுதியிலும் அனுமதி இன்றி மணல் அள்ள முயற்சிகளும், அதற் கான பாதைகளும் அமைக்கப்பட்டுள்ளன. திருச்சி மாவட்டத்தில் இயற்கை வளங்களை பாதுகாக்கும் வகையில் புதிய குவாரிகள் அமைக்க அனுமதி வழங்கு வதை கைவிட வேண்டும். அரசு விதிமுறைகளுக்கு மாறாக காவிரி கொள்ளிடத்தில் மணல் அள்ள பாதைகள் அமைத்து இருப் பதை அகற்ற விரைவான நடவடிக்கை எடுக்க வேண் டும்.

பாரதீய கிசான் சங்க மாநில துணை தலைவர் அய்யாக்கண்ணு: சூறாவளி யால் அழிந்து விட்ட வாழக்கும், காட்டு மிருகங்க ளால் அழிந்து விட்ட பயிர்களுக்கும் உரிய நஷ்ட ஈடு வழங்க வேண்டும். அது வரை விவசாயிகள் சாகுபடி செய்ய புதிய கடனை கொடுக்க வேண்டும். திருச்சி மாவட்டத்தை வற ட்சி மாவட்டமாக அறி வித்து அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ.10ஆயிரம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.

தமிழ்நாடு விவசாய பிரிவு மாநில துணை தலைவர் புலியூர்நாகராஜன்: காவிரி யில் கர்நாடக அரசு தண் ணீர் திறந்து விட மத்திய அரசு உடனடியாக நடவடி க்கை எடுக்க வேண்டும். சம்பா பயிருக்கு மேட்டூர் அணை செப்டம்பர் 17ம் தேதி தான் திறக்க முடியும் என்பதால் அதுவரை மேட்டூருக்கு கீழ் கல்லணை வரை 17 வாய்க்கால்களில் உள்ள 1.25லட்சம் ஏக்கர் வாழை சாகுபடி பயிர்களை காப்பாற்ற 3ஆயிரம் கன அடி நீர் திறந்து விட வேண் டும். 100 நாள் வேலை திட்ட பணியாளர்களை விவசாய வேலைக்கு பயன்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சம்பாவுக்கு போதிய உரம் கையிருப்பு

விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் ஜெயஸ்ரீ பேசுகையில், திருச்சி மாவட்டத்தில் சம்பா பட்டத்திற்கு ஏற்ற அதிக விளைச்சல் தரக்கூடிய நெல் ரகங்களான மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, ஏ.எஸ்டி 19, ஏடிடி 39, கோ 49, கோ 50, மற்றும் பிபிடி 5204 ரகங்களின் சான்று பெற்ற விதைகள் 581 மெட்ரிக் டன் அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு இதுவரை 43.950 மெட்ரிக் டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. நெல் சாகுபடியில் இரட்டிப்பு மகசூல் பெற ஒற்றை நெல் நாற்று நடவு முறையான திருந்திய நெல்

சாகுபடி தொழில் நுட்பத் தினை ஊக்கவிக்க தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஹெக்டேருக்கு ரூ.3ஆயிரம் மதிப்பில் இடுபொருட்கள் மானியமாக வழங்கப்பட உள்ளது. குறுவை மற்றும் சம்பா பருவத்திற்கு தேவையான யூரியா 3,485 மெட்ரிக் டன், டிஏபி 1980 மெட்ரிக் டன், பொட்டாஷ் 2,820 மெட்ரிக் டன், கலப்பு உரம் 3,955 மெட்ரிக் டன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உரக்கடைகளில் போதிய அளவு இருப்பில் உள்ளது என்றார்.

## விவசாயிகளுக்கு சிறுதானிய விதை கிராம திட்ட பயிற்சி

பதிவு செய்த நேரம்:2012-08-25 10:49:45

தா.பேட்டை, : தா. பேட்டை அடுத்த அஞ்ச லம் ஊராட்சி நீலியாம்பட்டியில் வட்டார வேளாண்மைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு 2012 2013ம் ஆண்டுக்கான சிறுதானிய விதை கிராம திட்ட பயிற்சி முகாம் நடந்தது.

அஞ்சலம் ஊராட்சி தலைவர் சுந்தரி தலைமை வகித்தார். உதவி வேளாண் அலுவலர் ரேவதி வரவேற் றார். தா.பேட்டை வேளா ண் உதவி இயக்கு னர் செல்வம் சிறப்புரையாற்றி னார். கம்பு விதை நேர்த்தி செயல்விளக்கத்தை துணை வேளாண் அலுவலர் சேவி யர் சவுந்தரராஜன் செய்து காண்பித்தார். ஏற்பாடு களை உதவி வேளாண் அலுவலர்கள் அசோக்குமார், ரவி, மனோகரன் செய்திருந்தனர். உதவி வேளாண் அலுவலர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

## வறட்சி, வெள்ளம், புயல் சமாளிக்க பாரம்பரிய ரக நெல் பயிரிடலாம் அதிக மகசூலும் அள்ளலாம் வேளாண் அதிகாரி தகவல்

பதிவு செய்த நேரம்:2012-08-25 10:20:02

திருத்துறைப்பூண்டி, : வறட்சி, வெள்ளம், புயல் ஆகியவற்றை சமாளிக்க பாரம்பரிய ரக நெற்பயிர்களை சாகுபடி செய்து, தண்ணீர் பற்றாக்குறையில் அதிக மகசூல் அள்ளலாம் என்று ஆதிரங்கம் இயற்கை வேளாண் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய இயக்குனர் ஜெயராமன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, மேட்டூர் அணை உரிய நேரத்தில் திறக்கப்படாததால், இந்தாண்டு குறுவை சாகுபடி இல்லை. சம்பா சாகுபடி என்னவாகுமோ என்று விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

இந்நிலையில் வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கை சீற்றங்களை தாங்கி வளரக்கூடிய நெல் ரகங்களை தேர்வு செய்து விவசாயிகள் விதைக்க வேண்டும்.
இதில் 70 நாள் பயிரான பூங்கார், 120 நாள் பயிரான கார்நெல், 150 நாள் பயிரான கருடன் சம்பா, 160 நாள் பயிரான மாப்பிள்ளை சம்பா ஆகிய பாரம்பரிய நெல் ரகங்கள் சிறந்தது. இதில் அதிக செலவு இல்லா மல் மகசூலை எடுக்கலாம்.
இந்த ரகங்களை சாகுபடி செய்ய 2 கோடை உழவு செய்து ஏக்கருக்கு 25 கிலோ வீதம் நேரடி விதைப்பு செய்து மட்டம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்துவிட்டால் மழை பெய்யும் போது விதை முளைத்து விடும். இந்த வகை நெல் ரகங்கள் ஒரு மாதம் வறட்சியாக இருந்தாலும், தண்ணீருக்குள் இருந்தாலும் தாக்கு பிடிக்கும். இவற்றிற்கு ரசாயன உரங்களும், பூச்சிக்கொல்லி மருந்துகளும் தேவையில்லை.
ஒருமுறை இந்த ரக விதை தெளித்துவிட்டால் பின்னர் அறுவடைக்கு சென்றால் போதும். பூங்கார் நெல் குறைந்தபட் சம் ஏக்கருக்கு 18 மூட்டை, கார்நெல் ஏக்கருக்கு 21 மூட்டை, கருடன் சம்பா 24 மூட்டை, மாப்பிள்ளை சம்பா 26 மூட்டை என்ற அளவில் மகசூல் கிடைக்கும். எனவே விவசாயிகள் பாரம்பரிய நெல் ரக சாகுபடியை மேற்கொண்டு செலவு இல்லாமல் மகசூல் எடுத்து பயன்பெறலாம்.
மேலும் ஆலோசனை பெற திருத்துறைப்பூண்டி உழவர் சந்தை எதிரே உள்ள இயற்கை விவசாய தகவல் மையத்திலும், 04369-220954, 9842607609 ஆகிய எண்களிலும் தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு ஜெய ராமன் தெரிவித்துள்ளார்.

## கம்பத்தில் இளநீர் விற்பனை அமோகம்

பதிவு செய்த நேரம்:2012-08-25 11:05:32

கம்பம், : கம்பம் பகுதிகளில் கடந்த சில ஆண்டாக கேரளா வாடல் நோய் தாக்குதலின் காரணமாக தென்னை விளைச்சல் வெகுவாக குறைந்து வருகிறது. இதனால் தென்னை மரங்களில் உள்ள காய்கள் மற்றும் சோகைகள் நோய்தாக்குதலால் உதிர்ந்தும், காய்ந்தும் வருகிறது. ஆகவே பெரும்பாலான விவசாயிகள் தென்னை மரங்களை வெட்டி அழித்து விட்டு மாற்று விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஒரு சில விவசாயிகள் இளநீருக்காக குட்டை ரக செந்நிற இளநீர் கன்றுகளை நட்டு அதை வெட்டி மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்றனர்.
தற்போது குட்டை ரக செந்நிற இளநீர் விற்பனை அதிகரிக்க துவங்கியுள்ளதால் விலையும் உயர்ந்துள்ளது. ஒரு இளநீர் விலை ரூபாய் 20 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதில் நல்ல சுவை உள்ளதால் பொதுமக்கள் விரும்பி பருகுகின்றனர். இதனால் காந்தி சிலை, சந்தை திடல், பழைய பஸ் நிலையம், அரசு மருத்துவமனை உள்ளிட்ட பகுதிகளில் தள்ளுவண்டி

கடைகளின் மூலம இளநீர் விற்பனை செய்யவது அதிகரித்து வருகிறது.
மின்தடை
பெரியகுளம், : பெரியகுளம் கோட்ட பராமரிப்பில் உள்ள ஆண்டிப்பட்டி துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. அதனையொட்டி இன்று காலை 9 மணி முதல் மாலை 5.30 மணி வரை ஆண்டிப்பட்டி, பாலக்கோம்பை, ஏத்தக்கோவில் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மின்சாரம் நிறுத்தம் செய்யப்பட உள்ளது. இத்தகவலை பெரியகுளம் மின்வாரிய செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

## கரும்புவிலை நிர்ணயம் செய்ய முத்தரப்பு கூட்டம் விவசாயிகள் வலியுறுத்தல்

பதிவு செய்த நேரம்:2012-08-25 10:43:21

தஞ்சை, : கரும்புக் கான விலை நிர்ணயம் செய்ய உடனடியாக முத்தரப்பு கூட்டத்தை கூட்ட வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.
தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் டிஆர்ஓ சுரேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது.
தோழகிரிப்பட்டி கோவிந்தராஜ் பேசுகையில், 2010ம் ஆண்டு பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு மாநில அரசு பங்குத் தொகை தற்போது தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கிக்கு வந்துள்ளது. இதை விவசாயிகளுக்கு விரைவில் வழங்க வேண்டும் என்றார்.
ஒரத்தூர் பிரகலாதன் பேசுகையில், ஒரத்தூர் பகுதி வெண்ணாற்றில் மேட்டுவாய்க்கால் கரை களை பலப்படுத்த வேண் டும். பள்ள வாய்க்கால், மேட்டு வாய்க்கால்களில் தடுப்புச்சுவர் கட்ட வேண் டும். இதில் இயந்திரம் கொண்டு தூர்வார வேண்டும் என்றார்.
அமையகரம் ரவிச்சந்தர் பேசும்போது, மேட்டூர் அணையை உடனடியாக திறக்க அரசுக்கு மாவட்ட நிர்வாகம் பரிந்துரைக்க வேண்டும். யூரியா, பொட்டாஷ் உரங்கள் கடும் தட்டுப்பாடாக உள்ளது என்றார்.
தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாது காப்பு சங்க செயலாளர் சுந்தரவிமல்நாதன் பேசுகை யில், கரும்புக்கு விலை நிர்ணயம் செய்ய முத்தரப்பு கூட்டத்தை கூட்ட வேண் டும். கரும்பு டன்னுக்கு ரூ.3,500 விலை நிர்ணயம் செய்ய வேண்டும். உழவர் அட்டை இன்னும் பல கிராமங்களில் பலருக்கு கிடைக்கவில்லை. இதனால் விவசாயிகள், அவரது பிள்ளை கள் சலுகைகளை பெற முடியவில்லை. 28 ஆண்டுகளாக தண்ணீர் வராத காங்கேயம்பேட்டை வாய்க் காலை தூர்வார வேண்டும். காவிரி டெல்டாவை பொறுத்தவரை தூர்வாரும் பணிகள் சரிவர நடைபெறவில்லை. இன்னும் தண்ணீர் வராத நிலையில் கூட பணி களை முழுமையாக முடிக்க பொதுப்பணித்துறை தயாராக இல்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயம் என்றார்.

எஸ்.புதூர் பாஸ்கரன் பேசுகையில், திருவிடைமருதூர் சர்வே பிரிவில் பட்டாவுக்கு மனு கொடுத்து பல ஆண்டுகளாகியும் எந்த நடவடிக்கையும் இல்லை. திருநள்ளாறு போகும் வழியில் எஸ்.புதூரில் அரசுக்கு சொந்தமான ஒரு குளத்தை கடந்த 7 ஆண்டுகளாக காணவில்லை. ஒரு தனி நபர் குளத்தை கூறுபோட்டு ரூ.80 லட்சத்திற்கு பிளாட்போட்டு விற்பனை செய்து வருகிறார். இதை அதிகாரிகள் கண்டு கொள்ளவில்லை என்றார்.பவர் கட்டால் பைத்தியம்

பாச்சூர் புண்ணியமூர்த்தி பேசும்போது, ஒரு மனிதன் ஒரு நாளைக்கு 8 மணி நேரம் தூங்க வேண்டும் என மருத்துவர்கள் கூறுகின்றனர். இல்லையென்றால் குறைந்தது 4 மணி நேரமாவது தூங்க வேண்டும். ஒரு மனிதன் ஒரு நாளைக்கு 4 மணி நேரமாவது தூங்கவில்லை என்றால் அவனுக்கு பைத்தியம் பிடித்துவிடும். தமிழ்நாடு மின்சார வாரியம் அந்த வேலையை தான் செய்து வருகிறது. மின்சார வாரியம் ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை மின்சாரத்தை நிறுத்துவதால் தூக்கமின்றி பைத்தியம் பிடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறினார். இதனால் கூட்டத்தில் பலத்த சிரிப்பொலி எழுந்தது.

## கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்

பதிவு செய்த நேரம்:2012-08-25 10:42:19

பாபநாசம், : பாபநாசம் ஒன்றியம் ராமானுஜபுரம் ஊராட்சியில் கால் நடை பாதுகாப்புத் திட்ட முகாம் நேற்று முன் தினம் நடைபெற்றது. முகாமை ராமானுஜபுரம் ஊராட்சி தலைவர் சவுந்தர்ராஜன் தொடங்கி வைத்தார்.

கபிஸ்தலம் கால்நடை உதவி மருத்துவர் வடி வேலன் தலைமையில் ஆய்வாளர்கள் கலியபெருமாள், தனலட்சுமி மற்றும் உதவியாளர்கள் கலியபெருமாள், சாந்தி உள்ளிட்ட குழுவினர் சிகிச்சை மேற்கொண்டனர். 250 கால்நடைகளுக்கு தடுப்பூசி, 200 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம், 30 மாடுகளுக்கு செயற்கை முறையில் கருவூட்டல் உள்ளிட்ட சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டது.

அய்யம்பேட்டை அருகே மணலூர் ஊராட்சியில் வீரமாங்குடி அரசு கால்நடை மருந்தகம் சார்பில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் நடைபெற்றது. முகாமில் 785 கால்நடைகளுக்கு செயற்கை முறையில் கருவூட்டல், சினைப்பரிசோதனை, மலடு நீக்கம், தடுப்பூசி, குடற்புழு நீக்கம் உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. முகாமில் ஊராட்சி தலைவர் ஜெயந்திபாஸ்கர், கால்நடை உதவி மருத்துவர் ராஜா, ஆய்வாளர் சிவசக்தி, பராமரிப்பு உதவியாளர் கோபால் உள்பட கலந்து கொண்டனர்.